# DEPOSITION OF WITNESS
# In the Court of Judicial Magistrate No.I, Mettur
# Case No :C.C.No.95/2022

Prosecution witness : **அ.சா.1** **Date : 18.10.2023**

| | |
|---|---|
| **Name :** ரவிக்குமார் | Caste : MBC |
| **Father's Name :** ராஜண்ணகவுண்டர் | Calling : விவசாயம் |
| Village : வீரக்கல் | Religion : இந்து |
| Taluk : மேட்டுர் | Age : 52 |

( Accused Present)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் வீரக்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சுமார்1 1/2 வருடம் முன்பு இரவு 9.30 மணியளவில் குப்பனூரில் உள்ள கடைக்கு சென்றுவிட்டு திரும்பி பழைய கிணறு அருகே வந்து கொண்டிருந்தபோது மதியழகன், தங்கம், அஜித்குமார் ஆகியோர் என்னை கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். அஜித்குமார் என்பவர் என்னை கன்னத்தில் அடித்து கல்லால் இடது கண்ணின் கீழ் அடி்த்தார். மாதையனும் தங்கமும் என்னை இடது விலாவில் எட்டி உதைத்தனர். 3 பேரும் என்னை கொல்லாமல் விட மாட்டோம் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டனர் நான் மயக்கம் தெளிந்து வீட்டிற்கு வந்து விட்டேன். அதற்கு அடுத்த நாள் வலி அதிகமானதால் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு பகல் 12.00 மணிக்கு சென்றேன். அங்கு சேலம் அரசு மருத்துவமனைக்கு போக சொன்னதால் போனோம். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். ( **புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். )**

**<u>குறுக்கு விசாரணை</u> –**

சம்பவத்தன்று நான் குடிபோதையில் இருந்தேன் என்றால் சம்பவம் நடந்த அன்றைய தினம் மதியம் மது அருந்தியிருந்தேன். ஆனால் இரவில் எனக்கு போதையில்லை. எதிரி அஜித்குமாரின் தாயார் சாந்தி எனது காட்டில் தான் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வருவார் போவார் அவ்வளவுதான். சம்பவத்தன்று எதிரி அஜித்குமாரின் தாயார் சாந்தி என்பவர் வேலை முடித்து விட்டு தென்னந்தோப்பு வழியாக வந்தபோது நான் மதுபோதையில் அவரது கையை பிடித்து இழுத்து சேலையை பிடித்து இழுத்தேன் என்றால் சரியல்ல. தன்அம்மாவை அழைத்துபோக அஜித்குமார் அப்போது அங்கு வந்திருந்தார் என்றும் சத்தம் கேட்டு அஜித்குமார் வந்து பார்த்தபோது நான் அவரின் அம்மாவிடம் தகாத முறையில் நடந்து கொண்டிருந்தேன் என்றும் அஜித்குமார் என்னிடம் இதுபற்றி கேட்டபோது தவறாக நடந்துவிட்டது மன்னித்துவிடுங்கள் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. சம்பவயிடம் தென்னந்தோப்பு அருகில் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். இருட்டில் நானே கீழே விழுந்து அடிபட்டுவிட்டது என்றால் சரியல்ல. அடுத்த நாள் காலையில் புகார் கொடுக்க அஜித்குமார் அவரது அம்மா அவர்கள் சென்ற போது புகார் கொடுக்க வேண்டாம் என்றும் சமாதானமாக போய்விடலாம் என்றும் சொன்னேன் என்றால்ச ரியல்ல. அதனால்தான் அஜித்குமாரின் தாயார் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு வரும்போது மதியம் 12.00 அல்லது 01.00 மணி இருக்கும். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் சேர்ந்து 2 நாட்கள் கழித்து விசாரித்தனர். போலிசார் விசாரணையில் 3 பேர் அடித்தததாகத்தான் சொன்னேன் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் அஜித்குமார் மட்டும அடித்ததாகவும் மாதையன் தங்கம்அடிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல 3 பேரும் அடித்ததாகத்தான் சொல்லியுள்ளேன்.

போலிசார் விசாரணையில் அஜித்குமார் மட்டும் அடித்தாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல 3 பேரும் அடித்ததாகத்தான் சொல்லியுள்ளேன். போலிசார் வாக்குமூலம் பெற்ற பிறகு மீண்டும் வந்து விசாரித்ததார்களா என்றால் இல்லை. நான் சொல்வது போல்சம்பவமே நடக்கவில்லை என்றும் எதிரியின் அம்மாவிடம் நான் தகாத முறையில் நடந்நதால் தட்டி கேட்டார் என்றும், குடிபோதையில் நானே தவறி விழுந்து விட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழககிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.I, Mettur**
**Case No :C.C.No.95/2022**

Prosecution witness : **அ.சா. 2** **Date : 18.10.2023**

| | |
|---|---|
| **Name :** சரசு | Caste : MBC |
| **Husband's Name :** ராமகிருஷ்ணன் | Calling : - |
| Village : வீரக்கல் | Religion : Hindu |
| Taluk : | Age : 63 |

( Accused Present)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் வீரக்கல்லில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ரவிக்குமார் எனது தம்பி. சுமார் 11/2 வருடத்திற்கு முன்பு இரவு 09.00 மணியளவில் எதிரி அஜித்குமார் என்பவர் என்னுடைய வீட்டிற்கு வந்து அவன் எங்கே இருக்கிறான் என்றுகேட்டு அவனை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார். அதற்குபிறகு நானும்என் மற்றொரு தம்பி குமார் என்பவரும் ரவிக்குமாரை காணவில்லை என்று குப்பனூர் அருகே சென்று பார்த்தோம். அப்போது ரவிக்குமாரை, அஜித்குமார், தங்கம், மாதையன் ஆகியோர் அடித்துபோட்டுவிட்டு சென்றிருந்தனர். ரவிக்குமாருக்கு இடுப்பிலும் இடது கண்ணிலும் நன்றாக அடிபட்டு இருந்தது. ரவிக்குமாரை மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்கிருநத சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைதது சென்றேன். ஆஜர் எதிரிதான் அஜித்குமார்தான் ரவிக்குமாரை அடித்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை –

சம்பவத்தன்று ரவிக்குமார் போதையில் இருந்தார் என்றால் அவர் குடிக்கவே இல்லை. அஜித்குமார் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்றால் எட்டு மணிக்க வந்தார். ரவிக்குமார் என் தம்பி.

அஜித்குமார் என் வீட்டிற்கு வந்து கேட்டார். எதற்காக என் மகனை கொல்லாமல் விட மாட்டேன் என்று சொல்கிறாய் என்றுகேட்டேனா என்றால் கேட்கவில்லை. அஜித்குமார் என் தம்பியை அடித்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் செல்கையில்அவர்கள் போய்விட்டார்கள். சம்பவத்தன்று என் தம்பி குடிபோதையில் அஜித்குமாரின் அம்மாவிடம் தகாத முறையில் நடந்து கொண்டதால் அதைப்பற்றி கேட்டதாகவும், அவர் முழு போதையில் இருந்ததால் அவரே தடுமாறி விழுந்து காயம் பட்டது என்றும் யாரும் அவரை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை சம்பவம் நடந்து அடுத்த நாள் 12.00 மணிக்கு விசாரித்தனர். நான் சொல்வதுபோல் சம்பவமே நடக்கவில்லை என்றும் அவரே தடுமாறி விழுந்து அடிபட்டது என்றும் தம்பி என்பதால்அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/—அ.க.பத்மபிரியா,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
மேட்டுர்.

DEPOSITION OF WITNESS
In the Court of Judicial Magistrate No.I, Mettur
Case No :C.C.No.95/2022

Prosecution witness : **அ.சா. 3** **Date : 18.10.2023**

| | |
|---|---|
| **Name :** மணிசேகர் | Caste : MBC |
| **Husband's Name :** மு்த்துசாமி | Calling : Cooly |
| Village : வீரக்கல் | Religion : Hindu |
| Taluk : மேட்டூர் | Age : 48 |

( Accused Present)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1) நான் வீரக்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் பைப் கம்பெனியில் வேலை செய்கிறேன். ரவிக்குமார் எனக்கு சித்தப்பா முறை ஆவார். சுமார் ஒரு வருடத்திற்குமுன்பு இரவு 9.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது, ரவிக்குமாரை 3 பேர் அடித்துவிட்டதாக கூறினார்கள். குப்பனூர் அருகே நான் சென்று பார்த்தபோது ரவிக்குமாருக்கு உடம்பில் காயம் இருந்தது. கண்ணுக்கு அருகே ரத்தம் வழிந்து கொண்டிருந்ததது இது சம்பந்தமாக ரவிக்குமாரின் வீட்டிற்கு சென்று தகவல் சொன்னேன். சம்பவயிடம் வந்த போலிசார் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. **(அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆகும். )**

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 ஐ எனக்கு தெரியும். சண்டை நடந்த அன்று நான் பழைய கிணறு அருகே நின்றிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 3 எதிரிகளும் ரவிக்குமாரை கெட்ட வார்த்தையில் திட்டி எதிரி அஜித்குமார் அ.சா.1ன் கண்ணுக்கு கீழே கல்லால் அடித்ததாகவும் மற்ற இரு எதிரிகளும் இடது பக்க விலா எலும்பில் அடித்ததாகவும் அதை நான் நேரில் பார்த்து சண்டையை விலக்கி விட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 23.03.2022 ஆம் தேதி 18.00 மணிக்கு சம்பவ யிடம் வநத் போலிசார் குமார் மற்றும்என் முன்னிலையில் வழககின் விவரங்களை சொல்லி பார்வை மகசரில் உள்ள விவரங்களை படித்து காண்பித்த பிறகுதான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு பரிந்து பொய்யாக சாட்சியம்அளிப்பதாக சொன்னால் சரியல்ல.

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

DEPOSITION OF WITNESS
In the Court of Judicial Magistrate No.I, Mettur
Case No :C.C.No.95/2022

Prosecution witness : **அ.சா. 4** **Date : 18.10.2023**

| | |
|---|---|
| **Name :** குமார் | Caste : MBC |
| **Husband's Name :** ராஜண்ணன் | Calling : Cooly |
| Village : சேலம் | Religion : Hindu |
| Taluk : சேலம் | Age : 62 |

( Accused Present)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது சேலத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு வீரக்கல்புதூரில் தோட்டம் உள்ளது. அ.சா.1 என் சொந்த தம்பி. ஞாயிற்றுக்கிழமைகளில் நான் என்னுடைய தோட்டத்திற்கு வருவேன். 20.03.2022 ஆம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் எதிரி அஜித் என்பவர் என் வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் ரவிக்குமார் எங்கே என்று கேட்டு மிரட்டிவிட்டு சென்றதாக என் அம்மா முத்தம்மாள் என்னிடம் சொன்னார். ரவிக்குமாரை தேடிச் சென்றபோது பழைய கிணறு அருகே ஏதோ சத்தம் வந்தது. அங்கு சென்று பார்த்தபோது எதிரி அஜித்குமார் கல்லாலும் மற்ற எதிரிகள் இருவரும் அ.சா.1 அடித்து கொண்டு இருந்தார்கள். என்னை பார்த்ததும எதிரிகள் போய்விட்டனர். என்னிடம் காட்டப்படும கையெழுத்து என்னுடையதுதான். 2 நாட்கள் கழித்து வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து அருகிலிருந்த இடங்களை எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான் அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியம். **(அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.3 ஆகும். )**

**குறுக்கு விசாரணை –**

சம்பவம் நடந்த அன்று என் வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 08.00 மணிக்கு சென்றேன். எதிரி அஜித்குமார் என்னவென்று சத்தம்போட்டார் என்றால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று ரவிக்குமாரை கேட்டு சத்தம் போட்டார். அதன்பிறகு நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். சம்பவ இடம் ரோடிலிருந்து தள்ளியிருந்த தென்னந்தோப்புக்குள் இருத்நது என்றால் சரிதான். அப்போது இரவு 09.00 மணி இருக்கும் அப்போது நல்ல இருட்டு என்றால் சரிதான். நான் போய் பார்க்கும்போது என் தம்பி கீழே கிடந்தாரா என்றால் ஆமாம். அவரை அடித்ததை நான் நேரடியாக பார்ககவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றும் என் தம்பி ரவிக்குமார் எதிரியின் தாயார் சாந்தியிடம் தவறாக நடந்ததை பற்றி என் தம்பியிடம் வந்து அஜித்குமார் கேட்டார் என்றும் என் தம்பி அன்று போதையில் இருந்ததால் அஜித்குமாரிடம் தெரியாமல் நடந்துவிட்டது தம்பி என்னை மன்னித்து விடுங்கள் என்று கேட்டால் என்றால் சரியல்ல. என் தம்பி முழு போதையில் தவறி விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அடுத்த நாள் காலை 10.00 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார்என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். என்ன விவரம் அதில் எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். அந்த ஸ்பாட்டில் எது எது எங்கிருந்தது என்று எழுதியிருந்தார்கள். நான் சொல்வது தவறு என்றும் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவமே நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி அஜித்குமாரின் தாயாரிடம் தவறாக நடந்தததால் அவர்கள் புகார்கொடுத்து விடுவார்கள் என்று பயந்து அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிப்பதாக சொன்னால் சரியல்ல.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**